# வருடாந்த செயற்திறன் அறிக்கை

# 2012

**கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு**

இல.100/1 லோகோர் ஆர்யா கடன் நிதியக் கட்டடம்

சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை

கொழும்பு – 02

## தூரநோக்கு

திருப்தியான

கூட்டுறவு மனித வளத்தினை

நிர்மானித்தல்

## பணிக்கூற்று

கூட்டுறவுத் துறையின் நிறைவேற்றுத்
தன்மையை முன்னிட்டு, அத் துறையில் மனித
வளத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான
கொள்கைகளை வகுத்தல்

# கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு – வருடாந்த செயற்திறன் அறிக்கை 2012

கூட்டுறவு ஊழியர்களின் சேவைப் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு 2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக விபரமான புள்ளிவிபரத் தகவல்களை வெளியிடுவது இவ் அறிக்கையினுடாக மேற்கொள்ளப்படுகின்றது.

ஆரம்ப நடவடிக்கையாக கீழ் குறிப்பிடப்படும் அத்தியாயங்கள் உள்ளடங்கும் வகையில் இவ் அறிக்கையின் உள்ளடக்கம் தயாரிக்கப்பட்டுள்ளது.

- **முதலாம் அத்தியாயம்**

  கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கட்டமைப்பு மற்றும் 2012ஆம் ஆண்டின் சேவை விபரங்கள் தொடர்பான விடயம்

- **இரண்டாம் அத்தியாயம்**

  கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் விடயப் பரப்பில் உள்ளடங்கும் உச்ச மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பெயர்ப்பட்டியலும் 2012ஆம் ஆண்டில் அச் சங்கங்களின் சேவையில் ஈடுபட்ட ஊழியர்கள் தொடர்பான விபரங்களும்

- **மூன்றாம் அத்தியாயம்**

  ஆணைக்குழுவின் அலுவலகத்தின் பௌதீக மற்றும் நிதி நடவடிக்கைகளும் 2012 ஆம் ஆணடில் ஆணைக்குழு மேற்கொண்ட ஒட்டு மொத்தமான செயற்பாட்டின் மீளாய்வும்.

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தொடர்பில்

*1971 ஆம் ஆண்டில் கூட்டுறவு விடயம் தொடர்பில் பொறுப்பாக இருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் அவர்களினால் எமது நாட்டில் கூட்டுறவு துறையை புனரமைப்புச் செய்யும் நோக்கில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தார். அதற்கமைய 1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன் ஏற்பாட்டின் கீழ் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.*

*15*

*கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு என்பது அரச திணைக்களம் என்பதுடன் அரை நீதிமன்ற அதிகாரம் கொண்ட சுயாதீனமான நிறுவனமுமாகும். கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் அதன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட 1981.12.01ந் திகதிய 169∴8 இலக்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைய கூட்டுறவு ஊழியரின் ஒழுக்கம் தொழில் பாதுகாப்பு மற்றும் நலன்புரிப்பாதுகாப்புக்காக இன் நிறுவனம் செயலாற்றுகின்றது.*

*இதன் போது அநேகமாக சட்ட நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கூட்டுறவு ஊழியர்களுக்கென்றே தேவையான கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் தேவைப்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பொருத்தமான ஏற்பாடுகளை வெளியிடலும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் ஆரம்ப நடவடிக்கைகளில் உள்ளடங்குகின்றது. மேலும் பயிற்சி வேலைத்திட்டம் மூலம் கூட்டுறவுத் துறையில் மனித வளத்தினை அபிவிருத்தி செய்வதற்காகவும் ஆணைக்குழு பங்களிக்கின்றது.*

*கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பிரகடனப்படுத்திய ஒழுங்கு விதிகள், நடைமுறை விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பவற்றை ஒன்றிணைந்து தற்கால சமூக பொருளாதார பின்னணிக்கு உகர்ந்ததாக, தற்கால தொழில்ச் சட்டத்திற்கு ஏற்புடையதான, கூட்டுறவுத் துறையில் புதிய மாற்றங்களுக்கும் தேவைப்பாடுகளுக்கும் அமைவானதாக கூட்டுறவு ஊழியர் தாபன விதிக்கோவை 2011ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டமை இவ் ஆணைக்குழுவினால் நிறைவேற்றிய விசேட செயற்பாடாகும். கூட்டுறவு ஊழியர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஆட்சேர்ப்பு வழிமுறையில் காணப்பட்ட முரண்பாடுகளைக் குறைத்தல் தொடர்பில் ஆணைக்குழுவினால் 2007∴5 இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டதுடன் இச் சுற்றறிக்கை 2008.01.01ந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனையும் தற்காலத்திற்கு ஏற்ற வகையில் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.*

# செயற்பாடுகள்

- கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கையில் மற்றும் பதவி உயர்வு வழங்குகையில், அவர்களுக்குரித்தான பணிக்கொடை வழங்குகையில் பின்பற்ற வேண்டிய கொள்கைகளைத் தீர்மானித்தல்.

- கூட்டுறவுச் சங்கங்களின் பதவிகளுக்கு நியமனம் செய்கையில் அவசியமாகும் தகைமைகளைத் தீர்மானித்தல் மற்றும் அத்தகைய பதவிகளுக்கான சம்பளத்தினை நிர்ணயித்தல்

- ஊழியர் பிணக்குகளைத் தீர்த்தல் மேன்முறையீடுகளை விசாரித்தல் மற்றும் கட்டளைகளை நடைமுறைப்படுத்தத் தவறும் கூட்டுறவுச் சங்கங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

- ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகளை விசாரித்தல்.

- ஊழியர் தொடர்பான ஒழுக்க நடவடிக்கைகளின் போது கூட்டுறவுச் சங்கங்களினால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறை.'.வழிமுறைகள் தொடர்பில் தீர்மானித்தல்.

- மனித வள அபிவிருத்திக்கான கலந்துரையாடல், மகாநாடு, மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

# உள்ளடக்கம்


**பக்கம்**

## I வது அத்தியாயம்

- ஆணைக்குழுவின் அமைப்பு, நிர்வாக நடவடிக்கை மற்றும் அதன் நிறுவன கட்டமைப்பு ………………………………………… 13-14
- ஊழியர் மற்றும் 2012ஆம் ஆண்டின் சேவையாளர் விபரம் ………………. 14-15

## II வது அத்தியாயம்

- உச்ச மட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அச் சங்கங்களின் 2012ஆம் வருடத்திற்கான சேவையாளர் விபரங்களும்…………………… 19-21

## III வது அத்தியாயம்

- 2012ஆம் ஆண்டின் பௌதீக மற்றும் நிதிச் செயற்பாடுகளின் விபரம் ……. 25-26
- வருடத்தில் நிறைவேற்றிய சாதாரண மற்றும் விசேட வேலைகளின் மீளாய்வு ………………………………………………. 27-38

## <u>அத்தியாயம் I</u>

- *ஆணைக்குழுவின் அமைப்பு, நிர்வாக நடவடிக்கை மற்றும் நிறுவன கட்டமைப்பு*
- *ஆளணி மற்றும் 2012 ஆம் ஆண்டின் சேவையாளர் விபரம்*

## கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அமைப்பும் நிர்வாக நடவடிக்கைகளும்

*கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவானது 1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழான ஏற்பாடுகளுக்கமைய கூட்டுறவு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமனம் பெறும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும். இம் மூவரில் ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவதுடன் மூவரும் நியமனம் பெறும் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குப் பதவி வகித்தல் வேண்டும். ஆயினும் இராஜினாமா செய்தல், அமைச்சரினால் பதவியிலிருந்து நீக்குதல், மரணம் போன்ற காரணங்களினால் வெற்றிடமாகும் பதவிகளுக்கு மூன்று வருடத்தில் எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக பிறிதொரு பொருத்தமானவரை அமைச்சர் நியமனம் செய்வார்.*

*2012ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் தலைவராக சட்டத்தரணி திரு.னுஇஆ.அருணகீர்த்தி தசநாயக்க அவர்கள் செயலாற்றியதுடன் ஏனைய உறுப்பினர்களாக சட்டத்தரணி திரு.றுமஞ்சுல விஜேவர்தன மற்றும் திரு.ஆ.று.ர்.கமல் ஐயரத்ன அவர்களும் செயலாற்றினர்.*

*1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் 9(1) பிரிவுக்கமைய இவ் ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையைச்சார்ந்த அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்படல் வேண்டும். இவர் இத்திணைக்களத்தின் பொறுப்புக் கூறும் அலுவலராக இருப்பார்.*


*2006.08.21ந் திகதியிலிருந்து ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்பைச் சார்ந்த திரு.ீ.ர்.ஆனந்த அவர்கள் சேவையாற்றியதுடன் 2007.10.16ந் திகதியிலிருந்து வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவி வகித்த இவர் 2012.08.03ந் திகதி வரை கூட்றவு ஊழியர் ஆணைக்குழுவின் பதில் செயலாளர் கடமையை மேற்கொண்டார். 2012.08.06ந் திகதியிலிருந்து இலங்கை நிர்வாக சேவை முதலாம் வகுப்பைச் சார்ந்த கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் று.யு.தம்மிக்க ராஜபக்ச அவர்கள் ஆணைக்குழுவின் பதில் செயலாளராக சேவையாற்றி வருகின்றார்.*

*1972ஆம் ஆண்டின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் 9(2) பிரிவிற்கமைய ஆணைக்குழுவின் ஊழியர்கள் இடமாற்றம் பெறும் அரச அலுவலர்களிலிருந்து நியமனம் செய்யப்படும்.*

*1972ஆம் ஆண்டின் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 12ற்கமைய வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ஆணைக்குழுவின் செலவுகள் மேற்கொள்ளப்படும். 2012ஆம் ஆண்டில் 302 இலக்க செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.*

## ஆளணியும் 2012ஆம் ஆண்டின் சேவையாளர் விபரம்

### கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிறுவன கட்டமைப்பும்



## 2012 வருடத்திற்கான சேவையாளர் விபரம்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2012.12.31ல் சேவையில் ஈடுபட்டோர் | வெற்றிடம் |
|---|---|---|---|
| செயலாளர் | 01 | 01 (பதில்) | - |
| கணக்காளர் | 01 | 01 | - |
| சட்ட அலுவலர் | 01 | - | 01 |
| நிர்வாக அலுவலர் (அரச முகாமைத்துவ உதவியாளர் சிறப்புத் தரம்) | 01 | 01 | - |
| அரச முகாமைத்துவ உதவியாளர் (I/II/III) | 08 | 08 | - |
| சாரதி | 03 | 02 | 01 |
| அலுவலக உதவியாளர் (I/II/III) | 03 | 02 | 01 |
| சுகாதார தொழிலாளி | 01 | 01 | - |
| மொத்தம் | 19 | 16 | 03 |

## இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்கள்

### செயலாளர்

- இவ் ஆணைக்குழுவின் பதில் செயலாளராக சேவையாற்றிய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.ீர்.ஆனந்த அவர்களுக்குப் பதிலாக 2012.08.06ந் திகதியிலிருந்து அதே அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு.று.யு.தம்பிக்க ராஜபக்ச அவர்கள் பதில் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார்.

| பெயர் | பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| செல்வி A.T .ரணசிங்க | அரச முகாமைத்தவ உதவியாளர் I | 2012.01.01 | - |
| திரு.J.K.R.P.பேமலால் | அரச முகாமைத்தவ உதவியாளர் III | 2012.01.01 | - |
| திரு.I.M.S.J.இளங்கோன் | அரச முகாமைத்தவ உதவியாளர் III | - | 2012.01.02 |
| திரு.A.P.N.சிறிவர்தன | அலுவலக உதவியாளர் II | 2012.09.28 | - |
| திரு.H.R.T பிரசாத் | சாரதி | 2012.10.02 | - |

# அத்தியாயம் II

- *உச்ச மட்ட கூட்டுறவுச் சங்கங்களும் அச் சங்கங்களின் 2012ஆம் ஆண்டிற்கான சேவையாளர் விபரங்களும்.*

## உச்ச மட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் உள்ள தேசிய மட்டத்திலான கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களது சேவைகளுக்கு உரித்தான விடயங்கள் தொடர்பில் ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் சேவைப் பிரச்சினைகளைத் தீர்த்தல், மட்டுமல்லாது பதவிகளுக்கான தகமைகளைத் தீர்மானித்தல் சம்பளம் மீளாய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகளும் இவ் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தேவை ஏற்படும் போது மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு தெளிவூட்டல், அறிவுரை வழங்கல் போன்ற நடவடிக்கைகளும் தேசிய ரீதியிலான பொது இணக்கப்பாட்டுடன் செயலாற்றுவதற்கான வழிகாட்டலும் இவ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. கீழ் குறிப்பிடப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களது சேவை தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளும் இவ் ஆணைக்குழுவினால் கண்கானிக்கப்படுகின்றது.

## உச்ச மட்ட கூட்டுறவுச் சங்கங்களின் 2012 ஆம் ஆண்டின் சேவையாளர் விபரம் (பூரணப்படுத்தப்பட்ட)

| | சங்கத்தின் பெயர் | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|
| | **கூட்டுறவுச் சமாசம்** | |
| 01 | வரையுள்ள இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை | 59 |
| 02 | வரையுள்ள இலங்கை சி.க.கூ. சங்க சம்மேளனம் | 18 |
| 03 | வரையுள்ள இலங்கை புடவை கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | 05 |
| 04 | வரையுள்ள இலங்கை கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம் | 102 |
| 05 | வரையுள்ள இலங்கை பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்க சமாசம் | - |
| 06 | வரையுள்ள இலங்கை தேசிய கடற்தொழில் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | 03 |
| 07 | வரையுள்ள இலங்கை தேயிலை உற்பத்தி கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | 01 |
| 08 | வரையுள்ள இலங்கை கூட்டுறவுக் கிராமிய வங்கிச் சமாசம் | 14 |
| 09 | வரையுள்ள இலங்கை நிறுவன சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | - |
| 10 | வரையுள்ள இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்க சமாசம் | 162 |
| 11 | வரையுள்ள இலங்கை தெங்கு உற்பத்தி கூட்டுறவுச் சங்க சமாசம் | 25 |
| 12 | வரையுள்ள இலங்கை கைத்தொழில் சங்க சம்மேளனம் | 41 |
| 13 | வரையுள்ள இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்க சமாசம் | 13 |
| 14 | வரையுள்ள இலங்கை வளமுகாமைத்துவ கூட்டுறவு இணையம் | 03 |


| அகில இலங்கை ரீதியிலான கடன் உதவுக் கூட்டுறவுச் சங்கம் | | |
|---|---|---|
| 15 | வரையுள்ள கல்விச் சேவை ஊழியர் சி.க.கூ சங்கம் | 601 |
| 16 | வரையுள்ள சுகாதாரத் திணைக்கள சி.க.கூ சங்கம் | 76 |
| 17 | வரையுள்ள புகையிரத நிலைய அதிபர்,எழுதுனர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 04 |
| 18 | வரையுள்ள தபால் தொலைத் தொடர்பு சி.க.கூ சங்கம் | 35 |
| 19 | வரையுள்ள Brown கூட்டு கைத்தொழில் பொது சேவைகள் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 20 | வரையுள்ள சணச அபிவிருத்தி வங்கிச் சேவையாளர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | - |
| 21 | வரையுள்ள ரஜரட்ட பல்கலைக்கழக கூட்டுறவுச் சங்கம் | - |
| 22 | வரையுள்ள துறைமுக கப்பல் சேவை கூட்டுறவுச் சங்கம் | - |
| 23 | வரையுள்ள யாஜீவன கூட்டுறவுச் சங்கம் | - |
| 24 | வரையுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை ஐக்கிய சேவையாளர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | - |
| 25 | வரையுள்ள இறைவரித் திணைக்கள கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 02 |
| 26 | வரையுள்ள சமூர்த்தி அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி அலுவலர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 05 |
| 27 | வரையுள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 06 |
| 28 | வரையுள்ள பொது சேவைப் பட்டதாரி சி.க.கூ சங்கம் | - |
| 29 | வரையுள்ள புகையிரதப் பாதைவேலை திணைக்கள கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 30 | வரையுள்ள துறைமுக அதிகார சபை ஊழியர் கூட்டுறவு வங்கி | 18 |
| 31 | வரையுள்ள சிறைச்சாலை திணைக்கள கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | கி.வி |
| 32 | வரையுள்ள சுகாதார சேவை சேமிப்புக் கடனுதவுச் கூட்டுறவுச் சங்கம் | 23 |
| 33 | வரையுள்ள பதிவாளர் நாயகம் திணைக்கள ஊழியர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 02 |
| 34 | வரையுள்ளஇலங்கை பொது சுகாதார பரிசோதகர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 02 |
| 35 | வரையுள்ளஇலங்கை மகளிர் அபிவிருத்திச் சேவை கூட்டுறவுச் சங்கம் | 42 |
| 36 | வரையுள்ள மக்கள் வங்கி ஊழியர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 05 |
| 37 | வரையுள்ள கொழும்பு பொது வைத்தியசாலை ஊழியர் சி.க.கூ சங்கம் | 10 |
| 38 | வரையுள்ளஇ.போ.ச ஊழியர் சிக்கன, நலன்புரி கூட்டுறவுச் சங்கம் | 06 |
| 39 | வரையுள்ள பொது சேவை கடனுதவு சேமிப்பு கூட்டுறவுச் சங்கம் | 32 |
| 40 | கூ.மொ.வி நிலைய ஊழியர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | 04 |
| 41 | வரையுள்ளஇலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர் சி.க.கூ சங்கம் | 19 |
| 42 | வரையுள்ளஇலங்கை அளவைத் திணைக்கள அளவை உதவியாளர் சி.க.கூ சங்கம் | கி.வி |
| 43 | வரையுள்ள தோட்ட சேவை அலுவலர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 44 | வரையுள்ள ஐக்கிய இலங்கை ஊடகவியலாளர் சிக்கன, | - |


| | | |
|---|---|---|
| | நலன்புரி கூட்டுறவுச் சங்கம் | |
| 45 | வரையுள்ள கூட்டுறவுத் திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் | - |
| **ஏனைய சங்கங்கள்** | | |
| 46 | வரையுள்ள சிறைச்சாலை சேவை வழங்கல் மற்றும் கட்டட அமைப்பு கூட்டுறவுச் சங்கம் | - |
| 47 | வரையுள்ள ஐக்கிய இலங்கை விவசாய கூட்டுறவுச் சங்கம் | - |
| 48 | வரையுள்ள வீடமைப்பு மற்றும் ஆதன கூட்டுறவுச் சங்கம் | - |
| 49 | வரையுள்ள ஐக்கிய இலங்கை சிறு மற்றும் மத்திய அளவிலான தாணிய சேமிப்பு முயற்சியாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் | 01 |
| 50 | வரையுள்ள இலங்கை உருக்குக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கம் | 08 |
| 51 | வரையுள்ள ஐக்கிய இலங்கை அப்பியாசக் கொப்பி உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் | 07 |
| 52 | வரையுள்ள அச்சக கூட்டுறவுச் சங்கம் | 14 |
| 53 | வரையுள்ள ஐக்கிய இலங்கை விசித்திர தாவர மற்றும் ஒட்டுண்ணி கூட்டுறவுச் சங்கம் | 12 |
| 54 | வரையுள்ள ஐக்கிய இலங்கை கரைவலை உரிமையாளர் மீன்பிடி கூட்டுறவுச் சங்கம் | - |


# அத்தியாயம் III

- *2012ஆம் ஆண்டின் தொழிற்பாட்டுத் தொகுப்பும் நிதிப் பயண்பாடும்.*
- *வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் விசேட நடவடிக்கைகளின் மீளாய்வு.*

## *2012 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டுத் தொகுப்பு*










| வருடம் | இலக்கு | நிறைவு |
|---|---|---|
| *2011* | - | *508* |
| *2012* | *520* | *331* |


செலவு விபர அறிக்கை 2012
தலைப்பு
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு

## 2012ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடும் செலவுத் தொகுப்பும் (செலவுத்தலைப்பு 302)


| செலவு தலைப்பு | விபரம் | 2012 மதிப்பிடு | மேலதிக ஒதுக்கம் `FR66 மாற்றம் | தேறிய ஒதுக்கம் | காலாண்டுச் செலவுகள் | | | | மொத்தச் செலவு மொத்தம் | மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1வது காலாண்டு | 2வது காலாண்டு | 3வது காலாண்டு | 4வது காலாண்டு | | |
| | **சம்பளம்** | 5,150,000.00 | 39,000.00 | 5,189,000.00 | 1,069,613.81 | 1,275,326.39 | 1,277,296.43 | 1,273,627.83 | 4,895,864.46 | 193,135.54 |
| 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 3,210,000.00 | -521,000.00 | 2,689,000.00 | 613,421.07 | 628,150.88 | 677,150.64 | 647,833.69 | 2,566,556.28 | 122,443.72 |
| 1002 | மேலதிக நேர கொடுப்பனவும் படிகளும் | 320,000.00 | 0 | 320,000.00 | 22,437.87 | 113,562.92 | 18,224.40 | 32,314.23 | 186,539.42 | 133,460.58 |
| 1003 | ஏனைய படிகள் | 1,620,000.00 | 560,000.00 | 2,180,000.00 | 433,754.87 | 533,612.59 | 581,921.39 | 593,479.91 | 2,142,768.76 | 37,231.24 |
| | பிரயாணம் | 305,000.00 | 0 | 305,000.00 | 12,548.50 | 71,860.50 | 181,411.00 | 13,088.00 | 278,908.00 | 26,092.00 |
| 1101 | பிரயாணம் - உள்நாடு | 90,000.00 | 0 | 90,000.00 | 8,848.50 | 39,360.50 | 2,611.00 | 13,088.00 | 63,908.00 | 26,092.00 |
| 1102 | பிரயாணம் வெளிநாடு | 215,000.00 | 0 | 215,000.00 | 3,700.00 | 32,500.00 | 178,800.00 | 0 | 215,000.00 | 0 |
| | வழங்கல் சேவை | 845,000.00 | 11,000.00 | 856,000.00 | 112,112.00 | 215,665.11 | 190,951.16 | 231,343.49 | 750,071.76 | 105,928.24 |
| 1201 | காகிதாகியும் அலுவலக தேவைப்பாடும் | 255,000.00 | 0 | 255,000.00 | 36,227.00 | 34,308.91 | 43,399.76 | 85,997.89 | 199,933.56 | 55,066.44 |
| 1202 | எரிபொருள் | 550,000.00 | 0 | 550,000.00 | 75,885.00 | 153,455.80 | 132,495.00 | 137,615.00 | 499,450.80 | 50,549.20 |
| 1203 | உபசரணை மற்றும் சீருடை | 40,000.00 | 11,000.00 | 51,000.00 | 0 | 27,900.40 | 15,056.40 | 7,730.60 | 50,687.40 | 312.60 |
| | பராமரிப்புச் செலவுகள் | 945,000.00 | 0 | 945,000.00 | 246,164.97 | 91,355.00 | 293,585.05 | 48,782.50 | 679,887.52 | 143,912.48 |
| 1301 | வாகனம் | 710,000.00 | 0 | 710,000.00 | 236,714.97 | 91,355.00 | 290,505.05 | 47,215.00 | 665,790.02 | 44,209.98 |
| 1302 | இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 215,000.00 | 0 | 215,000.00 | 8,600.00 | 0 | 3,080.00 | 0 | 11,680.00 | 203,320.00 |
| 1303 | கட்டடம் மற்றும் நிர்மானம் | 20,000.00 | 0 | 20,000.00 | 850.00 | 0 | 0 | 1,567.50 | 2,417.50 | 17,582.50 |
| | ஒப்பந்த சேவைகள் | 3,755,000.00 | -315000.00 | 3,440,000.00 | 804,561.53 | 819,443.33 | 712,065.24 | 751,063.59 | 3,087,133.69 | 352,866.31 |
| 1401 | கொண்டு செல்லல் | 360,000.00 | 0 | 360,000.00 | 90,000.00 | 90,000.00 | 60,000.00 | 6,000.00 | 246,000.00 | 114,000.00 |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 315,000.00 | 0 | 315,000.00 | 62,963.02 | 70,197.07 | 55,512.07 | 55,290.21 | 243,962.37 | 71,037.63 |
| 1403 | மின்சாரமும் நீரும் | 350,000.00 | 0 | 350,000.00 | 36,960.01 | 45,750.66 | 65,446.57 | 67,997.78 | 216,155.02 | 133,844.98 |
| 1404 | குத்தகை கூலி மற்றும் உள்நாட்டு வருமானங்கள் | 2,100,000.00 | -315,000.00 | 1,785,000.00 | 446,199.60 | 446,199.60 | 446,199.60 | 446,199.60 | 1,784,798.40 | 201.60 |
| 1405 | ஏனையவை | 630,000.00 | 0 | 630,000.00 | 168,438.90 | 167,296.00 | 84,907.00 | 175,576.00 | 596,217.90 | 33,782.10 |
| | மாற்றம் | 60,000.00 | 0 | 60,000.00 | 6,181.94 | 6,134.68 | 6,086.12 | 6,036.21 | 24,438.95 | 35,561.05 |
| 1506 | அரச அலுவலர் ஆதனக் கடன் | 60,000.00 | 0 | 60,000.00 | 6,181.94 | 6,134.68 | 6,086.12 | 6,036.21 | 24,438.95 | 35,561.05 |
| | மீண்டெழும் செலவு மொத்தம் | **11,060,000.00** | **0** | **10,795,000.00** | **2,251,182.75** | **2,479,785.01** | **2,661,395.00** | **2,323,941.62** | **9,716,304.38** | **857,495.62** |
| 2102 | அலுவலக உபகரணம் | 60,000.00 | 265,000.00 | 325,000.00 | 60,000.00 | 0 | 0 | 262,650.00 | 322,650.00 | 2,350.00 |
| 2103 | இயந்திரம் இயந்திர சாதனம் | 75,000.00 | 350,000.00 | 425,000.00 | 410,060.00 | 0 | 0 | 0 | 410,060.00 | 14,940.00 |
| | இயலுமை விருத்தி | 100,000.00 | 0 | 100,000.00 | 11,500.00 | 0 | 23,582.00 | 14,000.00 | 49,082.00 | 29,768.00 |
| 2401 | பயிற்சி மற்றும் இயலுமை விருத்தி | 100,000.00 | 0 | 100,000.00 | 11,500.00 | 0 | 23,582.00 | 14,000.00 | 49,082.00 | 50,918.00 |
| மூலதன செலவுகள் | | 235,000.00 | 0 | 850,000.00 | 481,560.00 | 0 | 23,582.00 | 276,650.00 | 781,792.00 | 47,058.00 |
| மொத்தச் செலவு மொத்தம் | | 11,295,000.00 | 0 | 11,645,000.00 | 2,732,742.75 | 2,479,785.01 | 2,684,977.00 | 2,600,591.62 | 10,498,096.38 | 1,146,903.62 |





| | 1ம் காலாண்டு | 2ம் காலாண்டு | 3ம் காலாண்டு | 4ஆம் காலாண்டு |
|---|---|---|---|---|
| தனிநபர் சம்பளம் | 1,069,613.81 | 1,275,326.39 | 1,277,296.43 | 1,273,627.83 |
| பிரயாணம் | 12,548.50 | 71,860.50 | 181,411.00 | 13,088.00 |
| வழங்கல் சேவை | 112,112.00 | 251,665.11 | 190,951.16 | 231,343.49 |
| பராமரிப்பச் செலவு | 246,164.97 | 91,355.00 | 293,585.05 | 48,728.50 |
| ஒப்பந்த சேவை | 804,561.53 | 819,443.33 | 712,065.24 | 751,063.59 |
| மாற்றம் | 6,181.94 | 6,134.68 | 6,086.12 | 6,036.21 |





| | 2011 | 2012 |
|---|---|---|
| தனிநபர் சம்பளம் | 4,316,174.00 | 4,895,864.46 |
| பிரயாணம் | 253,662.65 | 278,908.00 |
| வழங்கல் சேவை | 472,524.84 | 750,071.76 |
| பராமரிப்பச் செலவு | 754,156.75 | 679,887.52 |
| ஒப்பந்த சேவை | 3,738,064.00 | 3,087,133.69 |
| மாற்றம் | 25,175.22 | 24,438.95 |




| | தளபாட உபகரணமும் அலுவலக உபகரணங்களும் | இயந்திரம் மற்றும் இயந்திர சாதனம் | பயிற்சியும் இயலுமை விருத்தியும் |
|---|---|---|---|
| 1ம் காலாண்டு | 6000.00 | 410,060.00 | 11,500.00 |
| 2ம் காலாண்டு | 0.00 | 0.00 | 0.00 |
| 3ம் காலாண்டு | 0.00 | 0.00 | 23,582.00 |
| 4ம் காலாண்டு | 262,650.00 | 0.00 | 27,6650.00 |




| | *2011* | *2012* |
|---|---|---|
| பயிற்சியும் இயலுமை விருத்தியும் | *74,350.00* | *49,082.00* |
| தளபாட உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும் | *33,869.20* | *322,650.00* |
| இயந்திரம் மற்றும் இயந்திர சாதனம் | - | *4,10.060.00* |




| காலாண்டு | செலவு |
|---|---|
| 1ம் காலாண்டு | 2,732,742.75 |
| 2ம் காலாண்டு | 2,479,785.01 |
| 3ம் காலாண்டு | 2,684,977.00 |
| 4ம் காலாண்டு | 2,600,591.62 |

## 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடமைகளின் மீளாய்வு

*இவ் ஆணைக்குழுவானது 1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியா் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும் ஆயினும் ஆணைக்குழுவிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கூட்டுறவு ஊழியா் சேவைப் பிணக்குகளை 1992ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க கூட்டுறவு ஊழியா் ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தினூடாக தொழில் நியாயசபைக்கும் சமா்ப்பிப்பதற்கான சந்தா்ப்பம் கூட்டுறவு ஊழியா்களுக்குக் கிட்டியுள்ளது.*

*அதே போன்று அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது திருத்தத்தின் 09 வது அட்டவணையின் 1வது பட்டியலின் 17வது பிரிவிற்கமைய கூட்டுறவு விடயம் மாகாணங்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளதால் இவ் ஆணைக்குழுவின் விடய எல்லை தேசிய மற்றும் உச்ச மட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.*

### 2012ஆம் ஆண்டில் மேற்கொண்ட கடமைகள்

- **ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடாத்துதல்**

  *இத் திணைக்களத்திற்குக் கூட்டுறவு ஊழியா்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள், மேன்முறையீடுகள், கோரிக்கைகள் என்பன ஆணைக்குழுவிற்குச் சமா்ப்பிக்கப்பட்டதன் பின் கூட்டுறவு ஊழியா் ஆணைக்குழுச் சட்டம் மற்றும் உரித்தாகும் விதிகளுக்கமைய தீா்ப்பு மற்றும் முடிவுகள் வழங்கப்படுவது சாதாரண வழிமுறையாகும். இவ்வருடத்தில் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை 13 ஆகும்.*

  *அவசியமெனக் கருதும் சந்தா்ப்பங்களில் சேவையாளா், சேவை பெறுநா் ஆகிய இரு தரப்பினருடனும் கலந்துரையாடி இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் இருதரப்பினரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் முடிவுகள் பெற்றுக் கொடுக்கப்படும். ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளின் எண்ணிக்கைக்கு அமையவும் அதன் சிக்கல்களுக்கமையவும் ஆணைக்குழுவின் கூட்டம் நடாத்தப்படும் சந்தா்ப்பம் மற்றும் எண்ணிக்கை தீா்மானிக்கப்படும்.*

- **ஆணைக்குழுவின் கட்டளைகளை நடைமுறைப்படுத்தத்தவறும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தல்**

  *கூட்டுறவு ஊழியா் ஆணைக்குழுச் சட்டத்தின் 11வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கூட்டுறவு ஊழியா் ஆணைக்குழுவினால் ஊழியா்களின் மேன்முறையீடு மற்றும் வேறு காரணங்களின் மேல் கட்டளைகள் வழங்கப்படும்.*

  *அவ்வாறு ஆணைக்குழுவினால் வழங்கப்படும் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கட்டுப்பட்டுள்ளன. ஏதேனும் காரணத்தின் மேல் அக் கட்டளையை கூட்டுறவுச் சங்கம் நடைமுறைப்டுத்தத் தவறின் முன் கூறப்பட்டச் சட்டத்தின் 85வது பிரிவின் கீழ் அக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எதிராக சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு உண்டு.*

2012ஆம் அண்டில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் தீர்ப்புக்களைக் கூட்டுறவுச் சங்கங்களும், ஊழியர்களும் நடைமுறைப் படுத்தியுள்ளனர். எனவே 2012ஆம் ஆண்டில் ஆணைக்குழு கட்டளை மற்றும் தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் எதுவித வழங்குகளும் தாக்கல் செய்யவில்லை.

ஆயினும் கல்விச் சேவையாளர் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியரான திரு.யு.தர்மசேன என்ற ஊழியர் அச் சங்கத்தினால் வழங்கப்பட்ட இடமாற்றத்தினை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அவரது சேவை முடிவுறுத்தப்பட்டதை எதிர்த்து அவரினால் தொழில் நியாய சபையில் பிரதிவாதியாக தொழில் கொள்வோனாகிய கூட்டுறவுச் சங்கமும் இரண்டாவது பிரதிவாதியாக இக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவும் பெயரிடப்பட்டது.

இவ் வழக்கிற்கான ஆட்சேபனையை ஆணைக்குழு சமர்ப்பிப்பதற்கு முன் ஊழியருக்கும் சங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டின் மீது உரிய வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

## ❖ ஆணைக்குழு ஒரு திறத்தவரான வழக்குகள் தொடர்பாக செயல்படல்

கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் சில சந்தர்ப்பங்களில் தமது தொழில் கொள்வோனாகிய சங்கத்திற்கு எதிராக தடையாணை பெறுவதற்காக மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதுண்டு. அத்தகைய முறைப்பாடுகளில் இவ் ஆணைக்குழு, அதன் செயலாளர் மற்றும் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பிரதிவாதியாக குறிப்பிடப்படுவதும் உண்டு. மேலும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தும்படிக் கோரி ஊழியர்கள் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யும் சந்தர்ப்பங்களும் உண்டு. அத்தகைய வழக்குகளில் ஆணைக்குழுவினை சாட்சியாளர்களாக பெயர் குறிப்பிடப்படுவதுண்டு. இத்தகைய வழக்குகள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| **வழக்கு இல** | **முறைப்பாட்டாளர்** | **பிரதிவாதி** | **2012.12.31ந் திகதியில் நிலைவரம்** |
|---|---|---|---|
| HC/WA/02/2012 | வரைவுள்ள கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம் | வு.ஞானவத்தி மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | முறைப்பாடு வாபஸ் பெறப்பட்டுள்ளது. |
| 326T, 32755<br>3276, 3277<br>3278, 3279<br>3280, 3281<br>3284 | வரைவுள்ள கம்மல்பத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சேவை முடிவுறுத்திய ஊழியர்கள் | வரைவுள்ள கம்மல் பத்து தெங்கு உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் (ஆணைக்குழு சாட்சியாளராக அழைக்கப்பட்டிருந்தது. | மாரவில நீதவாதன் நீதிமன்றில் விசாரிக்கப்படுகின்றது. |
| 3265, 3266, 3269<br>3270,3271,3273<br>3274 | மேற்படியானது | மேற்படியானது | ஆணைக்குழுவின் முடிவினைச் செயல் படுத்தும் வகையில் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆயினும் அதற்கு எதிராக சங்கம் மேன் முறையீடு செய் துள்ளது. |

### ❖ <u>கூட்டுறவு ஊழியர் ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களை நியமித்தல்</u>

*1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்திய ஒழுங்குவிதிகளின் 92வது பிரிவிற்கமைய கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

### ❖ <u>1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தின் திருத்தம்</u>

*1972ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டத்தினை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தி அமைப்பதற்காக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் சட்ட ஆலோசகர் திரு.னு.ர்.விக்கிரம ஆரச்சி அவர்களைத் தலைவராகக் கொண்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இத் திருத்தச் சட்ட மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அவதானிப்பிற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

### ❖ 2012 ஆம் ஆண்டில் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல

| | **கூட்டுறவுச்சங்கம்** | **பதவி** | **எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | வரைவுள்ள அரச சேவைக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 02 | வரைவுள்ள இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் | ஏற்றுமதி முகாமையாளர் | 01 |
| 03 | வரைவுள்ள தபால் தொலைத் தொடர்பு ஊழியர் கூட்டுறவுச் சங்கம் | நிதி முகாமையாளர் | 01 |
| 04 | வரைவுள்ள தபால் தொலைத் தொடர்பு ஊழியர் கூட்டுறவுச் சங்கம் | நிர்வாக அலுவலர் | 01 |
| 05 | கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம் | விற்பனை உதவியாளர் | 01 |
| 06 | வரைவுள்ள இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் | விற்பனை முகவர் | 01 |
| 07 | வரைவுள்ள கைத்தொழில் சம்மேளனம் | தொழிற்சாலை முகாமையாளர் | 01 |
| 08 | வரைவுள்ள இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 09 | வரைவுள்ள இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் | பொது முகாமையாளர் | 01 |
| 10 | வரைவுள்ள கல்விக் கூட்டுறவுச் சங்கம் | நிபுனத்துவ ஆலோசகர் | 01 |
| 11 | வரைவுள்ள கல்விக் கூட்டுறவுச் சங்கம் | -- | 01 |

| | | | |
|---|---|---|---|
| 12 | வரைவுள்ள தபால் தொலைத் தொடர்பு ஊழியர் கூட்டுறவுச் சங்கம் | கணனி இயக்குனர் | 01 |
| 13 | வரைவுள்ள கைத்தொழில் சம்மேளனம் | தொழிற்சாலை முகாமையாளர் | 01 |
| 14 | வரைவுள்ள கல்விக் கூட்டுறவுச் சங்கம் | ஆலோசகர் | 01 |
| 15 | வரைவுள்ள அச்சக கூட்டுறவுச் சங்கம் | கணக்காளர் | 01 |
| 16 | வரைவுள்ள அரச சேவைக் கூட்டுறவுச் சங்கம் | ஆலோசகர் | 01 |
| 17 | வரைவுள்ள கல்விக் கூட்டுறவுச் சங்கம் | ஆலோசகர் | 01 |
| 18 | வரைவுள்ள இலங்கை இ.போ.ச ஊழியர் சிக்கன,நலன்புரி கூட்டுறவுச் சங்கம் | நிர்வாக அலுவலர் | 01 |
| 19 | வரைவுள்ள அரசப் பொறியியல் கூட்டுத்தாபன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளா | 01 |
| 20 | கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம் | கனரக வாகன சாரதி | 01 |
| 21 | கொழும்பு பொது வைத்தியசாலை சேமிப்பு கடனுதவு கூட்டுறவுச் சங்கம் | அலுவலக சேவை உதவியாளர் | 01 |
| 22 | வரைவுள்ள கல்விக் கூட்டுறவுச் சங்கம் | முகாமைத்துவ உதவியாளர் | 04 |
| 23 | வரைவுள்ள தேசிய இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்க சமாசம் | பொது முகாமையாளர் | 01 |
| 24 | வரைவுள்ள இலங்கை கிராமிய வங்கி கூட்டுறவுச் சங்கம் | ஆலோசகர் | 01 |
| 25 | வரைவுள்ள இலங்கை தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் | கணக்காளர் | 01 |

❖ <u>**பயிற்சிப் பட்டறை – 2012 (மாகாணங்களுக்கானது)**</u>

| தொடர் இல | பயிற்சி பட்டறையின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி | மாகாணம் | சமூகமளித் தோர் | செலவு |
|---|---|---|---|---|---|
| 01 | கூட்டுறவு ஊழியர் தாபன விதிக் கோவை தொடர்பில் மாகாண மட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அலுவலர் அறிவூட்டல் பயிற்சிப்பட்டறை | 2012.01.28 | கிழக்கு | 60 | 62000.00 |
| 02 | கூட்டுறவு ஊழியர் தாபனவிதிக் கோவை தொடர்பாக மாகாண மட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அலுவலர் அறிவூட்டல் பயிற்சிப்பட்டறை | 2012.05.12 | மத்திய | 20 | 110000.00 |

❖ *பயிற்சிப் பட்டறை – 2012 (சங்கங்களுக்கானது)*

| தொடர் இல | பயிற்சி பட்டறையின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி | மாகாணம் | சமூகமளித்தோர் | செலவு |
|---|---|---|---|---|---|
| *01* | வரைவுள்ள இலங்கை சந்தைப்படுத்தும் சம்மேளனம் மற்றும் கிராமயிவங்கிச் சமாச பணிப்பாளர் மற்றும் ஊழியர் அறிவூட்டல் பயிற்சிப்பட்டறை | *2012.09.14* | - | *40* | *3500.00* |
| *02* | வரைவுள்ள கல்வி சேவையாளர் கூட்டுறவுச் சங்க ஊழியர் மற்றும் பணிப்பாளர்களுக்கு லீவு மற்றும் ஊழியர் வரப்பிரசாதம் பற்றி அறிவூட்டும் பயிற்சி பட்டறை | *2012.10.10* | - | *80* | *24400.00* |
| *03* | வரைவுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் மற்றும் பணிப்பாளர் அறிவூட்டும் பயிற்சிப் பட்டறை | *2012.10.18* | - | *18* | *3000.00* |
| *04* | வரைவுள்ள சுகாதார திணைக்கள அலுவலர் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் மற்றும் பணிப்பாளர் அறிவூட்டும் பயிற்சிப் பட்டறை | *2012.11.13* | - | *100* | *8700.00* |









